




# CHEZHUMAI ©

# செழுமை ©

## Balaji Small Group of Mel Kodangalur

The members of this small group are conscious about the global warming. They love growing trees. Since one year they have been growing trees in more and more numbers as a TIST Small Group. They do not go for large number of trees, instead they plant variety of trees, and more over they choose the species, which helps them in long run. Primarily, they have planted cotton trees.

## மேல் கொடுங்கலூரின் பாலாஜி சிறுக்குழு

பூமியின் சுற்றுச்சூழலை பற்றி அக்கறை-யுள்ளவர்களாக இக்குழு உறுப்பினர்கள் உள்ளார்கள். இவர்கள் மரங்களை விரும்பி வளர்க்கிறார்கள். கடந்த ஓராண்டு காலமாக இவர்கள் TISTற்காக மரம் வளர்த்து வருகிறார்கள், பல்வேறு வகையான மரங்களை நடவு செய்யும் பழக்கத்தை கொண்டுள்ள இவர்கள், காலப்போக்கில் பலன் தரக்கூடிய மரங்களையே நடுகிறார்கள்.

TIST
The International Small Group & Tree Planting Program



TIST

**TIST India** : 4, Lakshmi Nagar, 6th Main, Nanganallur, Chennai, Tamil Nadu (India) 600061
Tel. +91-44-22246844 E-Mail prabakar@tist.org / josephrexon@tist.org Web: wwwtist.org

A member of this small group, Mr.Sridhar says that, “one of the main reasons for planting cotton trees is because cotton trees yield during March to June, which is the time for paying school fees to his children and this yield gives him a great hand”. In about 10 acres of land, there are 935 trees, all are of good and useful species like, agathai, drum stick, teak, cotton, etc., and they also have 350 teak seedlings. Utmost care is taken for all the seedlings. Unless the seedlings are in good height and strength, they are not transplanted, for example, the seedlings are kept in the polythene bags till they reach 4-5 feet in height and attain 5-10 cm in stem thickness. At this healthy state if the seedlings are transplanted, they will sustain even the acute summer. Overall, the activities of this small group are well planned.




Tea Seedlings of Balaji Small Group

பாலாஜி சிறுக்குழுவின் தேக்குக் கன்றுகள




முதல் முக்கியத்துவம் பருத்திக்கு கொடுக்கப்பட்டுள்ளது, இதற்கான காரணத்தை பற்றி இக்குழு உறுப்பினர் திரு. ஸ்ரீதர் அவர்கள் கூறும் பொழுது, “பருத்தி மார்ச் முதல் ஜீன் மாதம் வரை விளைச்சலைக் கொடுக்கும். குழந்தைகளின் பள்ளி திறப்பு சமயத்தில் இது மிகவும் உதவியாக உள்ளது,“ என்று விளக்கமளித்தார். பத்து ஏக்கர் பரப்புள்ள நிலத்தில் 935 மரங்கள் உள்ளன. நெடுங்காலம் பயன்தரக் கூடிய அகத்தி. முருங்கை, தேக்கு, பருத்தி போன்ற மரங்களே ஆகும். அதுமட்டுமல்லாமல் 350 தேக்கு மரக்கன்றுகளும் உள்ளன. நாற்றுக்கண்கள் போதிய அளவு உயரத்திற்கு வளர்ந்தால் மட்டுமே நடவு செய்யப்படுகிறது. நாற்றுக்கண்கள் 4 முதல் 5 அடி உயரமும், 5 முதல் 10 செ.மீ தடிமனும் ஆகும் வரை பாலிதீன் பைகளிலேயே வளர்க்கப்படுகின்றன. இம்மாதிரி வளர்ப்பினால் கோடை காலத்தில் பாதிப்பு ஏற்பட குறைவான வாய்ப்பே உள்ளது. இக்குழுவின் நடவடிக்கைகள் அனைத்தும் திட்டமிடப்பட்ட படியே நடக்கின்றது.



**TIST India** : 4, Lakshmi Nagar, 6th Main, Nanganallur, Chennai, Tamil Nadu (India) 600061
Tel. +91-44-22246844 E-Mail prabakar@tist.org / josephrexon@tist.org Web: wwwtist.org

## Do Not Burn Them

It is not only the trees, which reduce the $CO_2$, even the plants. The plants intake $CO_2$ and by the process of photosynthesis they produce energy to grow. At the same time, excessive $CO_2$ damages the yield and plants as well. Sugarcane being an annual crop reduces $CO_2$ round the year for photosynthesis. Once after the harvest, the leaves are trimmed and burnt resulting in addition of $CO_2$ to the atmosphere. Whatever $CO_2$ reduction the cane did for one year is mounted up again in just few minutes by burning the leaves. Do not burn them, put them on the soil along with the crops. They will protect the manure from being burnt by the direct sun light. Mr.Sridhar, a member of Balaji Small Group of Mel Kodangalur says that they never burn the unwanted leaves, they put them over the manure, and the soil below the leaves are always wet and moreover the farmers friend, earthworm does a great job in such wet state.

## செடிகளை எரிக்காதீர்கள்

மரங்கள் மட்டுமல்லாமல், செடிகளும் கார்பன் டை ஆக்ஸைடு வாயுவை குறைப்பதற்கு உதவி செய்கின்றன. கார்பன் டை ஆக்ஸைடு வாயுவை எடுத்துக் கொண்டு, சூரிய ஒளியின் உதவியுடன் செடிகள் வளர்கின்றன. அதே சமயத்தில் அதிக அளவான கார்பன்டை ஆக்ஸைடு வாயு செடிகளின் வளர்ச்சியையும், உற்பத்தியையும் பாதிக்கும் கரும்பு ஆண்டு முழுவதும் வளர்வதனால், கார்பன் டை ஆக்ஸைடு வாயுவை குறைப்பதில் பெரும் பங்கு வகிக்கிறது. ஆனால் அறுவடைக்குப்பின் அதன் இலைகளை எரிப்பதினால் கார்பன் டை ஆக்ஸைடு மீண்டும் உற்பத்தி செய்யப்படுகிறது. ஆண்டு முழுவதும் கரும்பு உட்கொண்டு கட்டுபடுத்திய வாயுவை, அதன் இலைகளை எரித்து மீண்டும் உற்பத்தி செய்கிறோம். இதை தவிர்த்து, அதன் இலைகளை மண்ணோடு மக்க விட்டு உரமாக பயன்படுத்த வேண்டும். பாலாஜி சிறுக்குழுவின் ஸ்ரீதர் இதைப்பற்றி தெரிவிக்கும் பொழுது, அவர்களின் குழு உறுப்பினர்கள் எப்பொழுதும் இலைகளை எரிக்காமல், மண்ணோடு மக்கிப் போகவே வழி செய்வார்கள் எனக் கூறினார்.

Casuarina Trees of Balaji Small Group



பாலாஜி சிறுக்குழுவின் சவுக்கு மரங்களை



Soil below the husk materials are always wet

காய்ந்த சருகுகளுக்கு கீழே இருக்கும் மண்ணில் எப்பொழுதும் ஈரப்பதம் இருக்கும்.



TIST **TIST India** : 4, Lakshmi Nagar, 6th Main, Nanganallur, Chennai, Tamil Nadu (India) 600061
Tel. +91-44-22246844 E-Mail prabakar@tist.org / josephrexon@tist.org Web: wwwtist.org

## Avoid Single Species

Thazhamboo, Malligai, Velavan, Brindhavanam and Roja Small Groups are the five newly registered small groups of Chittoor. They are with the TIST since three months and have come out with great numbers of eucalyptus trees. These five small groups planted more than 72,000 eucalyptus trees. Overall, small groups of Chittoor all put together have more than 1,80,000 trees, out of which 1,50,000 trees are eucalyptus. This activity of going for single species is away from TIST Best Practice. Every small group should have at least 3 different species of trees in their groves. This is strongly recommended to avoid the negative impacts associated with monoculture plantations. The Balaji Small Group of Mel Kodangalur is earning Rs.10,000/- in addition to the TIST Voucher payment by selling the yields of their drum stick and cotton trees. TIST insists all small groups of Chittoor to start a nursery with minimum 1000 seedlings of fruit bearing and other by product yielding species before the next voucher payment.

Variety of Species – Mel Kodangalur




பல்வேறு வகையான கன்றுகள் – மேல் கொடுங்கலூரின

## ஒரே வகைச் செடியை தவிர்க்க வேண்டும்

தாழம்பூ. மல்லிகை, வேலவன், பிருந்தாவன் மற்றும் ரோஜா என ஐந்து புதிய சிறுக்குழுக்கள் சித்தூரில் பதிவு செய்துக் கொண்டனர். கடந்த _ன்று மாதக் காலமாக இவர்கள் TISTடுடன் பணியாற்றி வருகின்றனர். இவர்கள் அதிகமாக தைல மரங்களையே வளர்க்கிறார்கள். இவர்கள் பயிரிட்ட தைல மரக்கன்றுகள் 72,000த்திற்கும் மேல் ஆகும். சித்தூரில் உள்ள எல்லா சிறுக்குழுக்களும் மொத்தம் 1,80,000 மரங்களை நடவு செய்துள்ளார்கள். அவற்றில் 1,50,000 தைல மரக் கன்றுகள் உள்ளன. இது TIST சிறுக் குழுவிற்கான சிறந்த பயிற்சி முறை அல்ல. ஒவ்வொரு சிறுக்குழுவும் குறைந்த பட்சமாக 3 வகையான மரங்களை வளர்க்க வேண்டும். ஒரே வகையான மரங்களை நடவதினால் ஏற்படக் கூடிய ந\டங்களை தவிர்க்க இயலாது. அதலால் TIST பல்வேறு வகையான மரங்களை நடவு செய்ய வேண்டும் என TIST கேட்டுக் கொள்கிறது. மேல் கொடுங்கலூரின் பாலாஜி சிறுக்குழு முருங்கை, பருத்தி போன்றவற்றை நடவு செய்ததால் ரு.10,000த்திற்கும் மேல் சம்பாதிக்கிறார்கள், சித்தூரில் சிறுக்குழுக்கள் பல்வேறு வகையான 1000 கன்றுகள் கொண்ட பண்ணையை துவங்க வேண்டும் என TIST கேட்டுக் கொள்கிறது.



TIST

**TIST India** : 4, Lakshmi Nagar, 6th Main, Nanganallur, Chennai, Tamil Nadu (India) 600061
Tel. +91-44-22246844 E-Mail prabakar@tist.org / josephrexon@tist.org Web: wwwtist.org

## Track Data of the Groves

All these days, your TIST Quantifier/Auditor was taking the count and colleted data on growth of your trees and seedlings. From January 2005, one additional detail about your tree grove is being collected - calculating the area and drawing a map, i.e., drawing the shape of your tree grove with the help of the Global Positioning System (GPS). If you see the India Map or your District Map, you can see the marking of your village as a small circle. TIST is drawing a map of your tree grove in your village map.

The Quantifier will walk clockwise along the perimeter of your tree grove by holding the Palm and GPS properly connected together. As the Quantifier walks along the tree grove perimeter, the GPS draws a map that traces the steps of the Quantifier. When the Quantifier completes walking around the tree grove and comes back to the starting point, a closed loop tract is displayed on the Palm, which represents the perimeter of the tree grove. After collecting the track data, the Quantifier takes a photograph corresponding to the particular track data with the name board clearly visible. Every tree grove should have a name board erected, stating the name of the small group, grove name and village. In future, even if the small groups forget the site of their tree grove, TIST will help them in identifying their tree grove. This way of collecting tract data on the tree groves will avoid confusion between two small groups. Please cooperate with your Quantifier and show him your entire tree grove by walking with him along your tree grove parameter.

Palm Top and GPS




பாம்டாப் மற்றும் GPS – வரைபடத்தை பதிவு செய்யும் கருவிகள்

## தோப்புகளின் வரைபடங்கள்

இது நாள் வரை TISTன் அளவீட்டாளர் தங்கள் மரங்களின் எண்ணிக்கையே பதிவு செய்து வந்தார். கடந்த ஜனவரி 2005ல் இருந்து, மேலும் ஒரு தகவலை அவர் சேகரித்து வருகிறார். குளோபல் பொஸிஸனிங் சிஸ்டத்தின் (GPS) உதவியுடன் தங்கள் தோப்பின் பரப்பு அளவு மற்றும் ஒரு வரைப்படத்தையும் அவர் தயார் செய்து வருகிறார்.

இந்திய தேசத்தின் வரைப்படத்திலோ அல்லது தங்கள் மாவட்டத்தின் வரைப்படத்திலோ அவர் இதை சிறு வட்டமாக குறித்து வைப்பார். TIST தங்கள் தோப்பிற்கான வரைப்படத்தை தயார் செய்து வருகிறது.

பாம்டாப் மற்றும் GPS கையைின் (Palm) எடுத்துக் கொண்டு, கடிகாரம் சுற்றும் திசையில் அளவீட்டாளர் தங்கள் தோப்பின் சுற்றளவை நடந்தே பூர்த்தி செய்வார். அப்பொழுது GPS இதைப் பதிவு செய்துக் கொள்ளும். தங்கள் தோப்பின் சுற்றளவை இவ்வாறு பதிவு செய்துக் கொண்ட பின், தங்கள் தோப்பை ஒரு புகைப்படமும் எடுத்துக் கொள்வார். ஆதலால். கட்டாயமாக எல்லா தோப்புகளிலும் சிறுக்குழுவின் பெயர் பலகை இடம் பெற்றிருக்க வேண்டும் என TIST கேட்டுக் கொள்கிறது. பெயர் பலகையில் குழுவின் பெயர், கிராமம், தோப்பின் பெயர் முதலியவை இடம் பெற்றிருக்க வேண்டும். இவ்வாறு பதிவு செய்வதினால் பிற்காலத்தில் தோப்புகளை சரியாக அடையாளம் கண்டுக் கொள்வதோடு மட்டுமில்லாமல், குழுக்களிடையே ஏற்படும் குழுப்பங்களையும் தவிர்க்கலாம். தங்கள் அளவீட்டாளருக்கு போதிய அளவு ஒத்துழைப்பை இதற்காக தர வேண்டும் என TIST கேட்டுக் கொள்கிறது.



TIST India : 4, Lakshmi Nagar, 6th Main, Nanganallur, Chennai, Tamil Nadu (India) 600061
Tel. +91-44-22246844 E-Mail prabakar@tist.org / josephrexon@tist.org Web: wwwtist.org

## Good Small Groups Earn their Voucher Payment through:

1. Regular submission of SGMRs at the Node meetings. Eligibility for a voucher requires that your Small Group submit 3 SGMRs in a row.
2. SGMRs should be submitted for the month that has ended. For example at the February Node meeting, your Small Group should submit the SGMR for the month of January wherein you should report your Group's activities during the month of January.
3. Regular attendance at Node Meetings by at least 2 members of the Small Group
4. Proper care of Nursery seedlings and trees in groves
5. Regular updates of group activities in their Log books by small group members
6. Good cooperation extended to TIST staff during their visit.
7. Planting of variety of tree species. No one species should be more 1/3rd of your entire plantings.
8. Ensure that your group's groves are quantified every quarter by requesting TIST staff at Node meetings to arrange for quantification of your group.

Padmanaban of Perumal Small Group of Marudham is receiving a voucher for Rs.27,000.



மருதம் கிராமத்தை சேர்ந்த பெருமாள் சிறுக்குழுவின் திரு. பத்மநாபன் அவர்கள் Rs.27,000 த்திற்கான வவுச்சர் கொகையைப் பெறுகிறார்.

## நல்ல சிறுக்குழுக்கள் தங்கள் வவுச்சருக்கான தொகையை பெறும் விதம்

1. நோட் கூட்டங்களின் SGMR சமர்ப்பித்தல். முன்று SGMR வரிசையாக சமர்பித்தால் வவுச்சர் தொகையை பெறலாம்.
2. நடப்பு மாதத்திற்கு முந்தைய மாதத்திற்கே SGMR கொடுக்கப்பட வேண்டும். நடப்பு மாதத்தின் செயல்கள் பற்றிய குறிப்பும் கொடுக்கப்பட வேண்டும். உதாரணமாக பிப்ரவரியில் ஜனவரிக்கான SGMRரும், செயல்களும் திட்டங்களும் பற்றிய அறிக்கையும் கொடுக்கப்பட வேண்டும்,
3. குறைந்தது இரண்டு உறுப்பினராவது நோட் கூட்டங்களில் பங்கேற்க வேண்டும்,
4. பண்ணையையும், தோப்பையும் நல்ல முறையில் பாதுகாக்க வேண்டும்,
5. பதிவேட்டில் செய்கைகளை பதிவு செய்தல்.
6. TIST ஆபிசர்களுக்கு போதிய அளவு ஒத்துழைப்பு கொடுத்தல்.
7. பல்வேறு வகையான மரம் வளர்த்தல், முன்றில் ஒரு பங்கு மரங்கள் மாறுப்பட்டிருக்கு வேண்டும்.
8. தங்கள் தோப்பிற்கான சரியான கணக்கீடு செய்யப்பட்டிருக்கிறதா என உறுதி செய்தல்.



TIST India : 4, Lakshmi Nagar, 6th Main, Nanganallur, Chennai, Tamil Nadu (India) 600061
Tel. +91-44-22246844 E-Mail prabakar@tist.org / josephrexon@tist.org Web: wwwtist.org

## Question and Answer

TIST is coming out with a new column in the Chezhumai – "Question and Answer". If your Small Group members have any queries with regard to TIST Project activities, they can be presented to the TIST staff during the Node Meeting. The TIST staff will do their best to answer your queries right at the Node meeting and in some cases may have to get back to your group with an answer. If you feel that your queries should be made known to all the small groups of Tamil Nadu, so that, every member will be educated with the answer, write your question on a piece of paper and hand it over to the TIST Staff, and upon review the same will be published in the Chezhumai. Before putting the question, discuss with the other small group members of your village and come out with one main question. We have seven Node Centers and we look forward to have only one question from every Node to publish it in the Chezhumai.

Prabakar explaining the record keeping of trees/seedlings to the small group members




பதிவேட்டில் மரங்களின் எண்ணிக்கையை பதிவு செய்து பற்றி திரு. பிரபாகர் அவர்கள் சிறுக்குழு உறுப்பினர்களுக்கு விளக்கம் அளிக்கும் காட்சி.

## TIST India

Mr. Prabakar Srinivasan, Project Manager

Mr. A. Joseph, TIST Coordinator and Correspondent

## கேள்வி – பதில்

செழுமை இதழில், "கேள்வி-பதில;" என ஒரு புதிய பகுதி வர உள்ளது. தங்கள் சந்தேகங்களை நோட் கூட்டங்களில் TIST ஆபிசரிடம் தெரிவித்தால் அவர்கள் அங்கேயே முடிந்த அளவு பதிலளிப்பர். ஒரு சிலமுறை அவர்கள் TIST உயரதிகாரிகளிடம் கேட்டுச் சொல்ல வேண்டியும் வரலாம். செழுமை இதழில் தங்கள் கேள்வி வர வேண்டும் என விரும்பினால், அதை சிறு தாளில் எழுதி TIST ஆபிசரின் நோட் கூட்டத்தில் கொடுக்கவும். TIST ஆபிசரிடம் பரிசீலனைக்கு பிறகே அவை செழுமை இதழில் இடம் பெறும். ஏழு நோட் மையங்களிலும் இருந்து தலா ஒரு கேள்வியையே செழுமை இதழில் இடம் பெற செய்ய முடியும். ஆதலால் மற்ற உறுப்பினர்களுடன் விவாதித்து பின்பு கேள்விகளை கொடுக்கவும்.

## TIST இந்தியா

திரு. பிரபாகர் ஸ்ரீனிவாசன், திட்ட மேலாளர்.

திரு. அ. ஜோசப், TIST தொகுப்பாளர் / தாளாளா



**TIST India** : 4, Lakshmi Nagar, 6th Main, Nanganallur, Chennai, Tamil Nadu (India) 600061
Tel. +91-44-22246844 E-Mail prabakar@tist.org / josephrexon@tist.org Web: wwwtist.org

| Schedule for Node Meeting | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **Node** | **Villages Covered** | **Group Center** | **Day** | **Session** | **From** | **To** |
| Chamundi | Chamundi,<br>El Endathur,<br>Agili | Mel Kodungalur | 1st Sunday<br>06.03.2005<br>03.04.2005 | Morning | 11:00 AM | 1:00 PM |
| Mel Kodungalur | Singapalli,<br>Ulundhai,<br>Mel Kodungalur,<br>Kattukolli | Mel Kodungalur<br>Kunnavakkam | 1st Tuesday<br>01.03.2005<br>05.04.2005 | Evening | 5:30 PM | 7:30 PM |
| Peruvalayam | Peruvalayam,<br>Melapulam,<br>Mottur | Melapulam | 2nd Saturday<br>12.03.2005<br>09.04.2005 | Morning | 9:00 AM | 11:00 AM |
| Kattiampandal | Kattiampandal,<br>Vellaputur | Kattiampandal | 2nd Sunday<br>13.03.2005<br>10.04.2005 | Morning | 9:00 AM | 12:00 AM |
| Chitoor | KeeraNallur,<br>Chittoor, Molachur,<br>Nandhimedu,<br>Singadivakkam,<br>Marutham, Jambhodi | Molachur | 3rd Sunday<br>20.03.2005<br>17.04.2005 | Afternoon | 3:00 PM | 5:00 PM |
| Kandoor | Sokandhi,<br>Kandoor | Molachur | 3rd Sunday<br>20.03.2005<br>17.04.2005 | Evening | 6:00 PM | 8:00 PM |
| Aandiseruvallur | Vedal,<br>Aandiseruvallur,<br>Kottavakkam,<br>Melpadavur,<br>Seruvallur,<br>Seruvallur-<br>Mettucolony | Vedal | 4th Saturday<br>26.03.2005<br>23.04.2004 | Afternoon | 3:00 PM | 5:00 PM |

| நோட் கூட்ட அட்டவணை | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **நோடு** | **உட்பட்ட கிராமங்கள்** | **நோட் மையம்** | **கிழமை** | **காலம்** | **நேரம்** | |
| | | | | | **முதல்** | **வரை** |
| சாமுண்டி | சாமுண்டி,<br>எல்.எண்டாத்தூர்<br>அகிலி | மேல் கொடுங்கலூர் | முதல் ஞாயிறு<br>06.03.2005<br>03.04.2005 | காலை | 11.00 | 1.00 |
| மேல் கொடுங்கலூர் | சிங்கப்பள்ளி<br>உளுந்தை<br>மேல் கொடுங்கலூர்<br>காட்டுக்கொல்லி, | மேல் கொடுங்கலூர்,<br>குன்னவாக்கம் | முதல் செவ்வாய்<br>01.03.2005<br>05.04.2005 | மாலை | 5.30 | 7.30 |
| பெருவளையம் | பெருவளையம்,<br>மேலாப்புலம்,<br>மோட்டூர் | மேலாப்புலம் | இரண்டாவது சனி<br>12.03.2005<br>09.04.2005 | காலை | 9.00 | 11.00 |
| கட்டியாம்பந்தல் | கட்டியாம்பந்தல்<br>வெள்ளப்புத்தூர் | கட்டியாம்பந்தல் | இரண்டாவது ஞாயிறு<br>13.03.2005<br>10.04.2005 | காலை | 9.00 | 12.00 |
| சித்தூர் | கீராநல்லூர்<br>சித்தூர், நந்திமேடு<br>மொளச்சூர்,<br>சிங்காடிவாக்கம்,<br>மருதம், ஜம்போதை | மொளச்சூர் | மூன்றாவது ஞாயிறு<br>20.03.2005<br>17.04.2005 | மாலை | 3.00 | 5.00 |
| காந்தூர் | சோகண்டி<br>காந்தூர் | மொளச்சூர் | மூன்றாவது ஞாயிறு<br>20.03.2005<br>17.04.2005 | மாலை | 6.00 | 8.00 |
| ஆண்டிச்சிறு வல்லூர் | வேடல்., சிறுவல்லூர்<br>ஆண்டிச்செருவல்லூர்<br>கொட்டவாக்கம்<br>மேல்ப்படவூர்,<br>சிறுவல்லூர்,<br>மேட்டுக்காலனி | வேடல் | நான்காவது சனி<br>26.03.2005<br>23.04.2004 | மாலை | 3.00 | 5.00 |



TIST

**TIST India** : 4, Lakshmi Nagar, 6th Main, Nanganallur, Chennai, Tamil Nadu (India) 600061
Tel. +91-44-22246844 E-Mail prabakar@tist.org / josephrexon@tist.org Web: wwwtist.org